## IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

MCOP No.24/2017 Date: 31.01.2025.

PW1 -செல்வகுமார்

சாட்சி மீண்டும் முன்னிலையானதின் பேரில் 2 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:

விபத்து சமயத்தில் நான் குமாரபாளையம் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு வரும் பொது மக்களுக்கு ஆலோசகராக இருந்து வந்தேன். விபத்து நடந்த அன்று நான் சங்ககிரி வட்டார போக்குவரத்து அலுவலகல் வேலையை முடித்துவிட்டு பவானி நோக்கி சென்று கொண்டிருந்தேன். என் வீடு தேவூரில் உள்ளது. எனக்கு சங்ககிரியில் பைனான்ஸ் உள்ளது. அந்த பைனான்சில் உள்ள வேலைகளை முடித்துவிட்டு தான் வீட்டிற்கு செல்வேன். நான் வழக்கமாக இருசக்கர வாகனத்தில் வீட்டிற்கு செல்வேன். எனக்கு இருசக்கர வாகனம் ஓட்ட உரிமம் உள்ளது. விபத்து நடந்த போது நான் என் தங்கை கணவருடன் சேர்ந்து இருசக்கர வாகனத்தில் சென்றேன். இந்த விவரத்தை நான் என் மனுவிலும் முதல் விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். விபத்தின் போது என் தங்கை கணவர் தான் இருசக்கர வாகனத்தை ஓட்டினார். என் தங்கையின் வீடு சங்ககிரி வட்டம், மொத்தையனூரில் உள்ளது. விபத்தின் போது நான் இருக்கையின் இருபக்கமும் கால் போட்டு அமர்ந்து சென்றேன். நாங்கள் இருவரும் தலைகவசம் அணியவில்லை. அப்போது எங்கள் இருசக்கர வாகனம் சுமார் 40 கி.மீ வேகத்தில் சென்றது. கீழே விழும் போதும் அதே வேகத்தில் தான் சென்றது. அப்போது தார்ரோட்டின் கங்கில் சருக்கி தடுமாறி கீழே விழுந்து விபத்தானது. நாங்கள் இருவரும் கீழே விழுந்துவிட்டோம். இருவரும் வலது பக்கத்தில் தான் விழுந்தோம். வாகனமும் வலது பக்கம் தான் விழுந்தது. அப்போது எங்களுக்கு பின்னால் 20 அல்லது 30 அடி தூரத்தில் இரண்டு லாரிகள் போட்டி போட்டுக்கொண்டு ஒன்று மற்றோன்றை முந்தி கொண்டு வந்து கொண்டிருந்தது. அந்த லாரிகள் எங்களை முந்தி செல்லும் சமயத்தில் தான் நாங்கள் கீழே விழுந்தோம். நாங்கள் கீழே விழுந்த போது லாரிகள் இரண்டும் எங்களை

முந்தி கொண்டு நிற்காமல் சென்றுவிட்டன. லாரிகள் முந்தும் போது நாங்கள் கீழே விழுந்திருந்தால் இருவரும் லாரி சக்கரத்தில் தான் விழுந்திருப்போம் என்றால் சரியல்ல. நான் விபத்து நடந்த விதம் பற்றி நான் தற்போது சொல்லும் சங்கதிகளை நான் என் மனுவிலும், முதல் விசாரணையிலும், போலீஸ் புகாரிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தற்போது வழக்கிற்காக பின்யோசனை செய்து மேற்கண்ட சங்கதிகளை பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் போலீஸ் புகாரில் மணல் சருக்கிவிட்டு தான் கீழே விழுந்தோம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் விபத்து பற்றி முன்னுக்கு பின் முரணாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் சாலை விபத்தில் ஏற்பட்டது அல்ல என்றால் சரியல்ல. கீழே விழுந்ததும் என் மாமா தங்கவேல் என்பவருக்கு போன் செய்து அவர் காரில் வந்து என்னை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். தங்கவேல் சுமார் 1/2 மணி நேரத்தில் விபத்து நடந்த இடத்திற்கு வந்து விட்டார். நான் நேராக ஈரோடு ஆர்த்தோ சென்டர் மருத்துவமனைக்கு சென்றேன். என் மாமா மருத்துவ சிகிச்சை எதுவும் பெறவில்லை. எனக்கு காலிலும், கையிலும் எழும்பு முறிவு ஏற்பட்டது. கையில் மட்டும் லேசான சிராய்ப்பு காயமானது. விபத்து நடந்த உடன் 108 அவசர ஊர்திக்கு ஏன் தகவல் கொடுக்கவில்லை என்றால் என் மாமா தங்கவேலுக்கு தகவல் சொல்லிவிட்டார். மருத்துவமனைக்கு என் மாமாவும் தங்கவேலுவும் அழைத்து சென்றார்கள். விபத்து பற்றி நான் மருத்துவமனையில் போலீசில் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். எனக்கு ஏற்பட்டது சிறுகாயம் மட்டும் தான் என்றால் சரியல்ல. விபத்து நடக்கும் போது நேரம் மாலை 6.30 மணியிருக்கும். எனக்கு விபத்தினால் எவ்வித நிரந்தர ஊனமும் இல்லை என்றால் சரியல்ல. விபத்தில் ஏற்பட்ட காயங்கள் எனக்கு பூர்ணமாக குணமடைந்துவிட்டது என்றால் சரியல்ல. நான் என்னுடைய வேலையையும் தொழிலையும் வழக்கம் போல் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்த 3 நாட்கள் கழித்து தான் போலீஸ் புகார் வாக்குமூலம் கொடுத்தேன் என்றால் சரிதான். என் உடை மற்றும் வாகனம் சேதம் அடைந்ததற்கான ஆதாரம்

தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கோரியுள்ள இழப்பீடு அதிகம் என்றால் சரியல்ல. எனக்கு வேறு சம்பவத்தில் கால் முறிவு ஏற்பட்டுவிட்டதால் அதனை சாலை விபத்து போல என் தங்கையின் கணவர் மற்றும் அவரது வாகனத்தை வைத்து ஜோடனை செய்து பொய்யாக போலீஸ் புகார் கொடுத்து பொய்யான சங்கதியுடன் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் தான் நான் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனு தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/-செல்வகுமார்

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,

சார்பு நீதிபதி, சங்ககிரி.